

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELANADU

மலர்: 19 ஐப்பசி 8 ஜுல்ஹ: 10 இதழ் 251
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-10-77

2 கார்கள் அச்சுவேலியில் கடத்தப்பட்டன!

நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஏழு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் இருகார்களை சனிக்கிழமை அதிகாலை 3மணியளவில் அச்சுவேலியில் கடத்தினர்கள்.

இக்கார்கள் பின்னர் அச்சுவேலியிலிருந்து ஒரு மைலுக்கு அப்பால் அநாதரவாகக் கண்டு பிடிக்கப்பட்டன.

அச்சுவேலியில் உள்ள கராஜ் ஒன்றுக்குச் சென்ற 7 இளைஞர்கள் துப்பாக்கியைக் காட்டி அங்கு நின்ற 'வக்சோல்' கார் ஒன்றைக் கடத்திச்சென்றனராம். ஏழு இளைஞர்களும் கைத்துப்பாக்கி வைத்திருந்ததாக இச்சம்பவம் பற்றிக்கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட 'வக்சோல்' காரில் சென்ற இளைஞர்கள், அச்சுவேலிக்குச் சமீபத்தில், துப்பாக்கிமுனையில் மற்றொரு 'ஏ-40' காரையும் கடத்திச் சென்றுள்ளதாக, இச்சம்பவம் பற்றிக்கூறப்படுகிறது.

இவ்விரு கார்களும் பின்னர்

(6-ம் பக்கம் பார்க்க)

பயங்கரமண்சரிவு: 27 பேர்பலி!

6 சடலங்களே மீட்கப்பட்டன

கம்பளையில் சம்பவம்

[நமது கம்பளை நிருபர் செ. செல்வராஜா]

கம்பளையில், நேற்று முன்தினம் இரவு எட்டுமணியளவில் ஏற்பட்ட பயங்கர மண்சரிவில், இருபத்தேழு பேர் உயிரிழந்தனர்! நேற்று நள்ளிரவுவரை ஆறுபேரின் சடலங்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டன. மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

கம்பளை எம். பி. திரு. டபிள்யு. பி. பி. திஸநாயக்கா உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான உதவிகள் அளித்தார்.

பொலிஸ், இராணுவம், பொது வேலைப் பகுதியினர், பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மீட்பு வேலையில் இரவு பகலாக ஈடுபட்டுள்ளனர்.

3மைல் தூரத்தில்

கம்பளை நகரிலிருந்து 3மைல் தூரத்திலுள்ள 'உடசிங்கா பிட்டியா' என்ற இடத்தில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. அரைவாசிமலை (பெரும் பாறுங்கல்) சரிந்து, ஆயிரம் அடி கீழ் நோக்கிச் சென்றதால் இவ் விபத்து ஏற்பட்டது.

இக்கல் அடித்துச் சென்ற பாதைகள், ஆறு ஓடும் பாதையாக காட்சியளிக்கிறது. வாழைத் தோட்டமொன்றும் முற்றாக அழிந்துவிட்டது

லயத்திலுள்ள 4ம் இலக்க வீடு முற்றாக தரைமட்டமாகிவிட்டது! இந்த லயத்திலுள்ள சரணபாலா என்பவரின் குடும்பத்தில் 5 பேரும், மண்சரிவுக்குப் பலியாகிவிட்டார்கள்!

சடலங்கள் மீட்கப்பட்டன

சரணபாலாவின் குடும்பத்தைச் சேர்ந்த ரஞ்சனி, பேபி, ராஜா மற்றும் இருவரின் சடலங்கள் மீடகப்பட்டுள்ளன.

மற்றொரு தமிழ் குடும்பத்தைச் சேர்ந்த 9பேர் பலியாகியுள்ளனர். இக்குடும்பத்தைச் சேர்ந்த சின்னையா சீனியம்மா என்ற 24 வயது பெண் மட்டுமே உயிர் தப்பியுள்ளார். கடந்தமாதம் திருமணப்பதிவு செய்துகொண்ட இவர், சம்பவத்தின்போது வேறுஒருஇடத்திற்குச் சென்றிருந்தார். இக்குடும்பத்தில் பலியானவர்கள் விபரம்: முத்தையா(56வயது) சிதம்பரம், லட்சுமி, புவனேஸ்வரி, பார்வதி, முத்தம்மா, வீரம்மா.

காயமடைந்தோர் ஆஸ்பத்திரியில்

காயமடைந்த 3 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை நள்ளிரவு ஒரு சடலம் மீட்கப்பட்டது. நேற்று காலையில் 4 சடலங்கள் மீட்கப்பட்டன. தொடர்ந்து மழை பெய்துகொண்டிருக்கிறது. இன்னும் 2 அடிக்கு கீழ் தோண்டினால் 9 குடும்பங்களையும் சேர்ந்தவர்களின் சடலங்களையும்மீட்கலாமென்று இன்று காலை இராணுவத்தினரும் பொலிசாரும் தெரிவித்தனர்.

பொலிஸ்சார்ஜன்ட் அபயசிங்காவும்கான்ஸ்டபிள் பேரம்பலமும் உடனடியாக சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு வந்தார்கள். சடலங்கள் யாவும் அறையொன்றில் வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மரண விசாரணை ஆரம்பமாகவில்லை.

இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட 20 தோட்டத் தொழிலாளர்களுக்கு, அத்தோட்டத்தில் பூட்டிக் கிடந்த பங்களா ஒன்றைக் கம்பளை எம். பி. திரு. திஸநாயகா திறந்து வழங்கியுள்ளார்.

ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் நாலா பக்கமும் திரண்டு நின்று தேவையான உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பயங்கரச் சத்தத்துடன்..

கம்பளை ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களில் லட்சுமி (20 வயது) என்ற பெண்ணும் ஒருவர். இவர் கர்ப்பவதி. காயமடைந்த மற்றொருவரான ராமச்சந்திரன் (26 வயது) என்பவர் மண் சரிவு நிகழ்ந்தது பற்றி என்னிடம் விபரமாகக் கூறினார்.

"சுமார் எட்டு மணியிருக்கும். ஒரு விமானம் அண்மையில் வருவதுபோன்று சத்தம் கேட்டது. பின்னர் பேரிடி மாதிரிக் கேட்டது. அவ்வளவுதான். எல்லாமே க்ஷணப்பொழுதில் நிகழ்ந்துவிட்டது" என்று கண்கலங்கக் கூறினார்.

மண் சரிவினால் ஒரு லயத்தின் அரைவாசிப்பகுதி தெய்வாதீனமாகச் சேதப்படாததால் மூவர் தப்பிவிட்டனர்.

இப்பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பெரும் மழையின் விளைவாக மேற்படி தேயிலைத்தோட்டத்தின் மேற்பிரிவு முற்றாக மண்சரிவினால் மூடப்பட்டுவிட்டது என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மண்சரிவினால் ஒன்பது தொழிலாளர்லயன்கள் பெருஞ் சேதத்துக்குள்ளாகின.

இறந்தோர் பற்றிய முழு விபரமும் சரியாகத் தெரியவில்லை, மூவர் மண்சரிவில் இருந்து காப்பாற்றப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து பாதிப்பு

மகாவலி கங்கையின் நீர் மட்டம் உயர்ந்துகொண்டு

(6-ம் பக்கம் பார்க்க)

பஸ் விபத்து: 15 பேர் காயம்!

பூநகரி, ஞாயிறு

முழங்காவிலில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடந்த பஸ் விபத்தில் 15 பிரயாணிகள் காயமடைந்தனர். இருவர் அபாயகரமான நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். 10 பேர் பூநகரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை 8 மணிக்கு மன்னாரிலிருந்து புறப்பட்ட பஸ், வெள்ளாங்குளத்திற்கு ஒன்றரை மைலுக்கப்பால், பாதையை விட்டு விலகி, ஒரு மரத்துடன் மோதியதால் பிரயாணிகள் காயமடைந்தனர். சாரதிக்குக் காயமேற்படவில்லை. இருவர் ஆசனங்களுக்கிடையில் நசிந்துவிட்டதால் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வி. பாக்கியம் என்ற பெண்ணுக்கு (56 வயது) முகத்தில் காயமேற்பட்டதுடன், வலது கையிலும் முறிவு ஏற்பட்டுள்ளது. மற்றொரு குழந்தைக்குத் தலையில் காயமேற்பட்டது. காயமடைந்த பிரயாணிகள் தனிப்பட்ட கார்கள் மூலம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். மன்னார்-சங்குப்பிட்டி பஸ்சேவையில் ஈடுபட்ட பஸ்ஸே விபத்திற்குள்ளாகியது.

யாழ். நகரில் ஐ.நா. தினம் இன்று கொண்டாடப்படும்

யாழ்ப்பாணம், திங்.

ஐக்கிய நாடுகள் தினம் இன்றுமாலை யாழ்.வயனெஸ் கழகத்தினரால், யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்படுகிறது.

மனித உரிமைகள்-இலங்கையும் ஐ.நா. சபையும், என்ற தலைப்பில், திரு.யோகேந்திரா துரைசுவாமி உரை நிகழ்த்துவார்.

இதைத்தொடர்ந்து 'ஐ.நா. பாதுகாப்புச்சபை மாதிரிக் கூட்டம்' திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெறும். திரு. எஸ். செபஸ்தியாம்பிள்ளை பொதுச் செயலாளராகக் கடமையாற்றுவார்.

கீழ்க்காணும் 10பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஒவ்வொருநாட்டையும் பிரதிநித்துவப்படுத்தி விவாதத்தில்

(6-ம பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம்
விசேட அறிவித்தல்

இடம்பெயர்ந்த ஆசிரியர்களின்
இடமாற்றக் கோரிக்கைகளை

நேரில் ஆராய்ந்து நிவாரணம் அளிப்பதற்காக கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் 25-10-77 செவ்வாய் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு வருவார்கள். ஆகவே அன்று காலை 9-00 மணிக்குக் கல்வித்திணைக்களத்திற்கு வந்து தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

ந. பாலசுப்பிரமணியம்,
பொதுச்செயலாளர்.

29, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 23-10-77

7494

திருமண அழைப்பு

மணமகன்
திருநிறை செல்வன்
டாக்டர்கெங்காதரன்

மணமகள்
திருநிறை செல்வி
சிவஜெயந்தி

முகூர்த்தம்: இன்று 24-10-77 திங்கட்கிழமை இரவு 9 மணி முதல் 11 மணிவரை.

இடம்: ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம், பழம் றோட், கந்தர் மடம்.

வரவேற்புபசாரம்: நாளை 25-10-77 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனித்தனி அழைப்பாக ஏற்க வேண்டுகின்றோம்.

அன்புடன்,

திருமதி இரத்தினம்
முருகையா
(மணமகளின் தாயார்)
58, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை

பொ. அம்பலவாணர்
(மணமகனின் தந்தை)
'தோப்பு' கருமலை,
ஆனைக்கோட்டை.

7495

இறைச்சிக் கடைகள் குத்தகைக்கான
கேள்விப்பத்திர அறிவித்தல்

1-1-78 முதல் 31-12-78 வரையிலான காலப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளில் வியாபாரம் நடாத்தும் உரிமையின் குத்தகைக்கான பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளாக 7-11-77 முற்பகல் 9-30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

வியாபாரம்	கேள்வி வைப்புப்பணம்	படிவக் கட்டணம்
1. மாட்டிறைச்சிக்கடை இல. எல். கியூ. 1 சந்தை. சாவகச்சேரி	100-00	10-00
2. மாட்டிறைச்சிக்கடை இல. எல். கியூ. 2 சந்தை, சாவகச்சேரி	100-00	10-00
3. ஆட்டிறைச்சிக்கடை இல. என். எம். எஸ் 1 சந்தை, சாவகச்சேரி	100-00	10-00
4. ஆட்டிறைச்சிக்கடை இல. என். எம். எஸ். 2 சந்தை, சாவகச்சேரி	100-00	10-00

மேற்படி வைப்புப் பணமும் கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 4-11-77 நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் திருப்பித் தரப்படமாட்டா. சித்திகரமான கேள்விதாரர்கள் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித் தரப்படும். கேள்வி வைப்புப் பணமும், படிவக் கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுக்கடிதம் மூலம் அனுப்பப்படலாம் எந்த வியாபாரத்திற்கு கேள்வி விடுக்கப்படுகின்றது என்ற விபரம் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையில் இடது மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையுமோ, எவற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளருக்கு உண்டு.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ரி. நவரட்ணராஜா,
விசேட ஆணையாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
18-10-77.
7475

யாழ்ப்பாண மாநகரசபை
முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளைக் கேள்விகள்மூலம் குத்தகைக்கு எடுத்து வியாபாரம் செய்பவர்கள், அக்கடைகளைத் தாமே நடாத்த வேண்டும். இதை விட்டு அக்கடைகளை வேறு ஒருவர் நடத்தவோ அல்லது உபவாடகைக்குக் கொடுக்கவோ அல்லது கொமிஷனுக்கு வழங்கவோ அல்லது வேறுஒருவருக்கு மாற்றிக் கொடுக்கவோ முற்பட்டால், அவர் சபையுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறியதாகக் கருதி, கடையைப் பூட்டி அதனை மாநகரசபை பொறுப்பேற்கும்.

ஒருவரிடமிருந்து கடையை மாற்றிப் பெறுபவர் அக்கடையை நடத்துவதற்கு உரித்து அற்றவராகவும், அனுமதியற்ற குடியிருப்பாளராகவும் கருதப்பட்டு அவர் வெளியேற்றப்படுவார். இந்த தர்மசங்கடமான நிலையைத் தெரிந்து கொள்ளாத பலர் மாநகரசபைக்குத் தெரியாதவிதத்தில் நவீன சந்தையிலும் மற்றும் பெரியகடையிலுள்ள மாநகர சபைக்குச் சொந்தமான இடங்களிலும் கடைகளை விலைக்குப் பேசி வாங்க முற்படுவதாக அறியப்படுகிறது அப்படி அவர்கள் நடந்து கொண்டால் தாங்களே தங்களுக்குக் கஷ்டத்தைத் தேடிக் கொள்ளுபவர்கள் ஆவர். எந்தக் காரணத்தைக் கொண்டும் கடை மாற்றங்களை மாநகரசபை அனுமதிக்காது என்பதைப் பொதுமக்கள் அனைவரினதும் கவனத்திற்கு இவ்வறிவித்தல் மூலம் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கேள்விகள்மூலம் கடைகளைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் தங்களது குத்தகைக்காலத்தினுள் கடைகளை நடத்தமுடியாவிட்டால் அவைகளைத் திரும்ப மாநகரசபையிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

மாநகரசபைக்குச் சொந்தமான சகல கடைகளும் கேள்வி மூலமே குத்தகைக்குக் கொடுக்கப்படும். ஆகவே புதிதாகக் கடைகள் கோரி விண்ணப்பிப்பவர்கள், கேள்விகள் மாநகரசபையினால் கோரப்படும் நேரத்தில் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர் கடிதமூலமோ அல்லது நேரிலோ கடைகள் கோரி விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் பொதுமக்கள் தகவலுக்காகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

க: சிவஞானம்
மாநகரசபை ஆணையாளரும்,
விசேட ஆணையாளரும்.

நகரமண்டபம்,
யாழ்ப்பாணம்,
21-10-77
7480

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

சட்டமூலங்கள் நிறைவேறின

கொழும்பு, ஞாயிறு

குற்றவியல் நீதிஆணைக்குழுக்கள் (நீக்கஞ்செய்தல்) சட்டமூலம், செலாவணிக்கட்டுப்பாடு (திருத்தம்) சட்டமூலம் ஆகியவை தேசியஅரசுப் பேரவையில் ஏகமனதாகச் சகல நிலைகளிலும் திருத்தமின்றி நிறைவேறின.

பண்டத்தரிப்பு மீனவர்
கூட்டுறவுச் சங்கம்
சித்தன்கேணி

"வெற்றிடம் இராக்காவலர்"

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 05 11-77 திகதிக்குமுன் "பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கம், சித்தன்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இராக்காவலாளர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

வயதெல்லை: 25—45 வரை.

கல்வித்தகைமை: 8-ம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

உடல்வலிமை: பாரிய நோய்வாய்ப்படாதவராகவும், நல்லதேக நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

பிணை: ரொக்கமாக ரூபா 750/- செலுத்துதல்வேண்டும்.

ஆதனப்பிணை: ரூபா 2000/-

வேதனம்: 150/- — 212 / 5X10, 6X2

மற்றும் அலவன்ஸ் வழங்கப்படும்.

விசேட தகைமை: சங்க தொழிற்பரப்பிற்குள் வசிப்பவர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்

தலைவர்
பண்டத்தரிப்பு மீனவர்
கூட்டுறவுச் சங்கம்,
சித்தன்கேணி
7477

புதிய சந்தையில் விற்பனைக்கிளை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் புதியசந்தையில் அபிவிருத்திக் கூட்டுறவு மொத்த விற்பனைக்கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கிளையை யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப் திறந்து வைத்தார்.

அரசாங்க செயற்திட்டங்களுக்கு ஒத்துழைத்தல், கறுப்புச் சந்தையை ஒழித்தல் ஆகிய முக்கிய நோக்கங்களுக்காகவே இக்கிளை ஆரம்பிக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (கா,

---

பதவி உயர்வு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் தபாலகத்தில் தொலையச்சு இயக்குனராக கடமையாற்றிய செல்வி அமுதா சின்னத்தம்பி பதவி உயர்வுடன், கொழும்பு மத்திய தந்திக் காரியாலத்துக்கு இடமாற்றமாகி மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு தொலையச்சு மேற்பார்வை இயக்குனராக நியமனம் பெற்றுள்ளார். இவ்வெற்றிடத்தை உருவாக்குவதற்கு, அ. இ. த. த. தொ யூனியன் பலகாலமாக போராடி வந்தது குறிப்பிடத்தக்கது. (கெ)

அறிவித்தல்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் 12,000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூபா 250/- தலைமைக்காரியாலயத்தில் கட்டிக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திரம் 77-10-28-ம் திகதிக்குமுன்னர் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்கத்தில் "சாக்குக் கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்
தெல்லிப்பளை ப. நோ. கூ.
சங்கம்,
தெல்லிப்பளை.
22-10-77
7486

கேள்விப் பத்திர அறிவித்தல்
சாவகச்சேரி நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

சாவகச்சேரி நகரசபைக்கு 1978-ம் ஆண்டுக்கு கீழ் குறிப்பிடப்படும் குத்தகைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ந் திகதி காலை 9-30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

	கேள்வி வைப்புப் பணம்	படிவக் கட்டணம்
1. வண்டி வான் காலைக் குத்தகை	50-00	5-00
2. இரட்டை மாட்டு வண்டி மூலம் இந்நகரசபை எல்லைக்குள் கூட்டப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு	50-00	5-00
3. நகரசபைக்குச் சொந்தமான சந்தையிலுள்ள சாணியை அள்ளி எடுப்பதற்கு	50-00	5-00

மேற்படி வைப்புப்பணமும், கேள்விப் படிவக் கட்டணமும் செலுத்தப்படுவதன் பேரில் 4-11-77-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் திருப்பித் தரப்படமாட்டா. கேள்வி வைப்புப் பணமும் படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படலாம். அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம். எந்த நோக்கத்திற்காககேள்வி விடுவிக்கப்படுகின்றது என்ற விபரம் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையில் இடது மேல் மூலையில் தெளிவாகக்குறிப்பிடல் வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாமல் கேள்விப் பத்திரங்கள் அனைத்தையுமோ எவற்றையேனுமோ ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி விசேட ஆணையாளருக்கு உண்டு.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ரி. நவரட்ணராஜா,
விசேட ஆணையாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
20-10-77.
7474

வரி விளம்பரம்

தேவை

ரிங்கர், லேத்மன், வெல்டர் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும் ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 7444

மனோகரா படமாளிகைக்கு மதுபானச்சாலைப் பொறுப்பாளர் (Bar Keeper) ஒருவர் தேவை. விரும்புவோர் மனோகரா படமாளிகை முகாமையாளரிடம் 25-10-77 மாலை 6-00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும். பிணைப் பணம் ரூபா 5000/- 7489

மண்கும்பான் வெள்ளக்கடற்கரை பள்ளிவாசலுக்கு ஆலீம் அல்லது லெப்பை தேவை. நல்ல வருமானம் உண்டு. 5-11-77க்கு முன் பள்ளிவாசல் நிர்வாக சபை, 40, பெரிய கடை மே/பா றிபைன் அன்கோ, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 7492

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் பெரிய விசாலமான வீடு தேவை. கார்கராச், மின்சாரம், குழாய் நீர் வசதி (drainage) என்பவற்றுடன் கூடிய புதிய வீடு விரும்பத்தக்கது. வாடகை ரூபா 400/- வரை கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 7493 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7493

எட்டியாந்தோட்டையில் உள்ள K. சிவகுருநாதன் அன் சன்ஸ் நிறுவனத்திற்கு புடவை, பலசரக்கு, இரும்பு வியாபாரக் கணக்கு தமிழில் எழுதுவதில் திறமையான அறிவுள்ள கணக்கு லிகிதர் தேவை. அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் நிர்ணயிக்கப்படும். 30-10-77-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். யாழ்ற்றன் ஸ்ரோர்ஸ், 82, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்பு-11. 7479

வகுப்புகள்

சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். வாரத்தில் மூன்று வகுப்புகள். 31-10-77ல் ஆரம்பமாகும் வகுப்புகளுக்கு திங்கள், புதன், வெள்ளியிலும் 1-11-77ல் ஆரம்பமாகும் வகுப்புகளுக்கு, செவ்வாய், வியாழன், சனியிலும் வகுப்புகள் உண்டு. பதிவுக் கட்டணம் ரூபா 5/- மாதக் கட்டணம் ரூபா 10/- யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, ராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7490

அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாண உயர் கலைக்கல்லூரியில் City and Guilds (London) Electrical Engineering Part I&II, C.E I Part I வகுப்புகள் தகுதிகாண் விரிவுரையாளர்களால் நடாத்தப்படுகின்றன. இப்பயிற்சியின் முடிவில் பரீட்சை மூலம் கல்லூரி 'டிப்ளோமா' சான்றுப்பத்திரம் வழங்கப்படும். சேர விரும்புவோர் பதிவாளருடன் தொடர்புகொள்க. பதிவாளர். உயர்தரக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 7478

வாடகைக்கு

இல. 615, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கடை வாடகைக்குண்டு. நேரடியாகத் தொடர்புகொள்ளவும். 20, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 7470

"நட்புறவை மேலும் வளர்க்கும் பயணம்"

ரஷ்ய பயணம் பற்றி தேசாய்

மாஸ்கோ, அக். 23

பாரதத்திற்கும், சோவியத் யூனியனுக்கும் இடையிலான நட்புறவு மேலும வளரும் வாய்ப்பு உருவாகியுள்ளது என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினார்.

தற்போது ஆறுநாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு சோவியத் யூனியன் வந்துள்ள திரு. தேசாய், சோவியத் யூனியன் ஜனாதிபதி திரு. பிரஸ்னேவைச் சந்தித்து உரையாடினார்.

திரு. தேசாயுடன் பாரத வெளிவிவகார அமைச்சர் திரு. வாஜ்பாயும் வந்துள்ளார்.

பாரதமக்களின் நட்பை சோவியத் மக்கள் விரும்புவது குறித்து திரு. தேசாய் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவு மேலும் வளர்வதற்குத் தமது இப்பயணம் உதவும் என்றும் சொன்னார் அவர். (உ)

"இஸ்ரேலுடன்ராஜரீகத் தொடர்பு கொள்ள இந்தியா விரும்பவில்லை"

டமாஸ்கஸில் ஜோர்ஜ் பெர்னண்டஸ்

டமாஸ்கஸ், அக். 23

பாரத கைத்தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸ் சிரிய அதிபர் அசாத்துடன் டமாஸ்கஸில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இஸ்ரேல் பற்றிய பாரத கொள்கையில் மாற்றம் இல்லை என்று தெரிவித்தார் திரு. பெர்னண்டஸ்.

பாரத - சிரிய நட்புறவு மேலும் வளரவேண்டும் என்று இரு தலைவர்களும் விருப்பம் தெரிவித்தனர்.

இஸ்ரேலுடன் பாரதம் ராஜதந்திரஉறவை வைத்துக்கொள்ளாது என்று திரு. பெர்னண்டஸ் வலியுறுத்திக் கூறினார்.

திரு. பெர்னண்டஸ் தமது மூன்றுநாள் சிரிய பயணத்தை முடித்துக்கொண்டு பாங்கொக் பயணமானார். (உ)

"தாய்மார் சினிமாவை நிஜவாழ்க்கை என்று நம்பி விடுகிறார்களே"

கலைஞர் கவலை

நீலகிரி, அக். 23

"கழகத்தின் ஒன்பதாண்டு சாதனையை மக்கள் மறந்து, ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியுள்ள அ. இ. அ. தி. மு. க. ஆட்சிப் பொறுப்பிற்கு வர அவர்களிடம் உள்ள மூலதனம் அரசியல் கருவூலமா என்றால் இல்லை, அரசியலில் பெற்ற தெளிவா என்றால் இல்லை; மற்றவர்களைத் தெளிவு செய்கிற அளவிற்கு அரசியல் புரியுமா என்றால் இல்லை; தமிழ் நாட்டு மக்களுக்காகத் தியாகம் செய்தவர்களா என்றால் இல்லை. எதுவும் இல்லாமல் அப்படி அந்தக் கட்சி வெற்றி பெற்றதென்றால் அதற்கு அவர்கள் சொல்லுகின்ற காரணம் எங்களுக்கு அதிகமான வாக்குகள் தாய்மார்கள்தான் அளித்தார்கள் என்கின்றனர். தாய்மார்கள் கள்ளம் கபடமற்றவர்கள், சினிமாவில் ஒருவர் நல்லவராக நடித்தால், அவரை உண்மையில் நல்லவர் என கருதும் சுபாபமுடையவர்கள். சினிமா வாழ்க்கை வேறு; சொந்த வாழ்க்கை வேறு" என கலைஞர் மு. கருணாநிதி நீலகிரியில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:— "எம். ஜி. ஆருக்கு அரசியல் கூடாது என்று சொல்லமாட்டேன். இவர் அரசியல் தெரிந்த நடிகரல்ல. அரசியல் தெரிந்தவராக, அண்ணாவைப் புரிந்தவராக இருந்தால் நிருபர்கள் அண்ணாயிசத்திற்கு விளக்கம் கேட்ட நேரத்தில், கெபிடலிசம், சோஷலிசம், கம்யூனிஸம் மூன்றும் சேர்ந்ததுதான் அண்ணாயிசம் என சொல்லியிருக்கமாட்டார். இவருக்கு அண்ணாயிசமும் தெரியாது, கெபிடலிசமும் தெரியாது, கம்யூனிஸமும் தெரியாது" என்றார். (கெ-உ)

• • •

இக்பால் விசாரணைக் கமிஷன்

புதுடில்லி, அக். 23

"கர்நாடக மாநில விவசாய அமைச்சர் திரு. சிக்கிகவுடா வுடா, அரசுத்தலைமைச் செயலாளரை "பெரியகூலி" என்றும் மற்ற அதிகாரிகளை "சின்னக்கூலி" என்றும்எடை போடுவாராம்

இத்தகவலை, அமைச்சர், ஒரு உரக்கம்பெனிக்கு சட்டவிதிகளை மீறிச் சலுகைகாட்டியதாக, தனிநபர் விசாரணைக் கமிஷன் முன் சாட்சியமளித்த அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் திரு ரங்கசாமி கூறினார்.

இவ்விசாரணை நீதிபதி ஜனாப் இக்பால் முன்னிலையில் நடைபெற்று வருகிறது. (கெ-உ)

பொதுவாழ்வு குற்றத்தடுப்புச் சட்டம்

சென்னை, அக். 23

தமிழக அரசு உருவாக்கிய "பொதுவாழ்வு குற்றத்தடுப்பு சட்டம்" போல் கேரளாவில் இச்சட்டம் உருவாக்கப்படும். இச்சட்டமூலத்தின் பிரகாரம் சட்டமன்ற உறுப்பினர்கள் உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், ராஜ்யதலைவர்கள் பொதுவாழ்வில் செய்யும் குற்றங்களை ஊழல்களை, விசாரிப்பதற்கும் இச்சட்டமூலத்தை விசாரிக்க முடியுமென கேரள முதல்வர் திரு. ஏ. கே. அந்தோனி அறிவித்துள்ளார்.

இதற்கான சட்டமுன் வரைவுகளை கேரள சட்டமன்ற அமைச்சர்கள் ஏற்றுள்ளனர் என்றும் முதல்வர் தெரிவித்தார். (கெ-உ)

"பாகிஸ்தானில்

7½ கோடி மக்களை பணயம் வைத்து ஆட்சி நடக்கிறது"

மாஜி பிரதமர் பூட்டோ குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், அக். 23

பாகிஸ்தானில் உள்ள 7 கோடி 50 லட்சம் மக்களை பணயம் வைத்து இராணுவ ஆட்சி பாகிஸ்தானில் நடக்கிறது என்று முன்னாள் பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

லாகூர் உயர் நீதிமன்றத்தில் தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள கொலைக் குற்றச்சாட்டின்பேரிலான வழக்கின் போது ஜனாப் பூட்டோ மேற்கண்டவாறு சொன்னார்.

பாகிஸ்தான் மக்கள் சொந்த அரசு ஒன்றை நிறுவ முடியாதிருப்பதாகக் கூறிய ஜனாப் பூட்டோ அரசியல் சட்ட திருத்தம் தேவையற்றது என்றும் சொன்னார். (உ)

"சமயபாடப் புத்தகங்கள்

வெளியீட்டு உரிமையை மீண்டும் வழங்குக!"

யாழ்ப்பாணம், திங்கள்

சமயம் மற்றும் மொழி சம்பந்தமான பாடப்புத்தகங்களை அச்சிட்டு, வெளியிடும் உரிமையைத் தங்களுக்கு மீண்டும் வழங்குமாறு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை கல்விஅமைச்சர் திரு நிஸங்கா விஜயரத்தினவைக் கோரியுள்ளது.

சைவபரிபாலனசபை கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் மேலும் தெரிவித்துள்ளதாவது "1889-ம் ஆண்டு முதல் சைவபரிபாலன சபை சமய அறிவை வளர்க்கும் பொருட்டு 'இந்து சாதனம்' எனும் பெயரில் தமிழ் ஆங்கில ஏடுகளை வெளியிட்டு வருகிறது. இத்துடன் பாடசாலைகளில் உபயோகிப்படும் கல்வித்திணைக்களத்தினால் அங்கீகாரம் பெற்ற பாடப் புத்தகங்களையும் சைவபரிபாலன சபை வெளியிட்டு வந்தது. ஆனாலும் பாடப்புத்தகங்களை வெளியிடுவது சம்பந்தமாக கடந்த அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டத்தினால் சைவபரிபாலன சபை கடந்த பல ஆண்டுகளாக வெளியிட்டு வந்த பாடப்புத்தகங்களை அச்சிடுவதை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

"இலங்கையிலுள்ள இந்து சபைகளில் சைவபரிபாலன சபை மட்டுமே இலாபம் கருதாமல் பாடப்புத்தகங்களை பிரசுரித்து வெளியிட்டு வந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"இவற்றைக் கருத்திற் கொண்டு சமய மற்றும் மொழிசம்பந்தமான பாடப் புத்தகங்களைத் தொடர்ந்து பிரசுரித்து வெளியிடும் உரிமையை மீண்டும் வழங்க ஐக்கியதேசிய கட்சிக் அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்" என்று சைவபரிபாலனசபை கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இன்று ஐ. நா. தினம்

அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் மான்செஸ்ரார் நதி தீரத்தில்- உலகை அமைதியாக ஓட்டிக்கொண்டிருக்கும் கட்டுப்பாட்டு நிலையமாக எழுந்துநிற்கின்றது ஐக்கிய நாடுகள் சபை என்னும் வானுயர்ந்த கட்டிடம்.

அரசியல் உலகிலே போர் மேகங்கள் மூண்டால் இந்த மாளிகையுள் அரசியல் இடிமுழக்கங்களைக் கேட்கலாம். மாறும் அரசியல் பிரச்னைகள் இந்தமாளிகையுள் எதிரொலிக்கும். சித்தாந்த மோதல்களும் ஏகாதிபத்திய சோஷலிஸ கம்யூனிச மோதல்களும் இந்த மாளிகையுள் புயலாக வீசும். இத்தனைக்கு நடுவிலும் இன்றைய உலக அரசியலின் கலங்கரை விளக்கமாக சமாதானத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இந்த ஐக்கியநாடுகள் சபை காட்சி அளிக்கிறது.

மூன்று நேர்கோடுகள்

சமாதானமும் பாதுகாப்பும்- பொருளாதாரம் சமூக முன்னேற்றமும்- மனிதஅடிப்படை உரிமைகள் என்னும் மூன்று நேர்வரைகளால் ஆக்கப்பட்ட முக்கோணியாக இச்சபை அமைந்துள்ளது.

உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தல்கள் எழும்போது இச்சபை அவசர அவசரமாகக் கூடி நிலைமையை ஆராய்ந்து சமாதானத்தீர்வுக்கு வழிகாண முயலும். அவ்வாறே உலகின் ஒருநாட்டின் பாதுகாப்புக்கு இன்னொரு நாடு குந்தகம் விளைவிக்கமுயன்றால் அதனைத்தடுப்பதிலும் இச்சபை முயலும்.

பற்றிமாகரன்

இவ்வாறாக உலகின் அரசியல் இராணுவ நடவடிக்கைகளை நாடிபார்க்கும் வைத்தியராக திகழும் இச்சபை உலக நாடுகளின் பிரச்னைக்கு அடிப்படைக் காரணியாக இருக்கும் பொருளாதாரப் பிரச்னைகளையும் அலசி ஆராயமுயல்கிறது அபிவிருத்தி அடையும் நாடுகளை அபிவிருத்தி அடைந்த நாடுகளைக்கொண்டு கைதூக்கிவிட்டு சமூகமுன்னேற்றத்தை ஏற்படுத்த முனைகிறது. இந்தப் பொருளாதார வழிகாட்டலுக்கு உதவியாக விஞ்ஞானப் பிரிவு ஒன்றும் நிதிப்பிரிவு ஒன்றும் இச்சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது

மனித உரிமை

ஐக்கியநாடுகள் சபையின் உயிர்முதலாக இருப்பது மனித உரிமைகள் சாசனம் என்றால் மிகையாகாது. இவ்வுலகில் மனிதனாகப்பிறந்த ஒவ்வொரு உயிரினதும் குடியுரிமை-பேச்சு உரிமை-வாழும் உரிமையை நிலை நாட்டும் இச்சாசனம் இவ்வுலக சமாதான வாழ்விற்கு அத்திபாரமாக அமைகிறது. சர்வதேச உலகில் இவ் அடிப்படை மனித உரிமைக்கு அனைத்துநாடுகளும் உத்தரவாதம் பெயரளவில் அளித்துள்ளபோதிலும் இவ் அடிப்படை மனித உரிமைகள் எந்த அளவுக்கு அமுல் செய்யப்படுகின்றது என்பதுபெருங் கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.

கையாலாகாத்தனம்

ஐக்கிய நாடுகள் சபை ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்னையில் தலையிட முடியாத தலையிடி இருப்பதினாலேயே உலகில் பல காய்ச்சல்கள் ஏற்பட இடமேற்படுகிறது. உள்நாட்டுப் பிரச்னைகள் வலுவடைந்து வல்லரசுக்கள் பக்கசார்பு அமைத்து போர்க்களத்தை சிருஷ்டித்து துப்பாக்கிகள் கதை பேசத்தொடங்கிய பிறகே அது சர்வதேசப் பிரச்னை என்றநிலையில் ஐக்கிய நாடுகள் சபை வைத்தியம் செய்ய ஓடிவருகிறது. ஆனால் புரையோடிவிட்ட நோய் பலகாலம் நீடித்து துப்பாக்கிகளும் மனித உயிர்களும் காலியான பின்பே சுகமடைகிறது.

இதேபோல் பொதுச்சபை பாதுகாப்புச்சபை என்னும் இரு சபைகளை உள்ளடக்கிய ஐ. நா. வில் பாதுகாப்புச் சபையில் பந்தியமர்ந்திருக்கும் வல்லரசு மாமாக்கள் தமது வீட்டோ (தடை உரிமை) தத்துவத்தை பிரயோகித்து உலக சமாதானத்திற்கு ஆறுதல்அளிக்கக்கூடிய பல பிரேரணைகளை உடனடியாக நிறைவேற்றமுடி

(5ம் பக்கம் பார்க்க)

மாஜி தி.மு.க. மந்திரி கைது!

அத்துமீறி காணி ஒன்றில் நுழைந்தாராம்!!

சென்னை, அக். 23

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரும் மாஜி மாநில அமைச்சருமான திரு. எம். கண்ணப்பன் பொலிசாரால் நேற்று கோயம்புத்தூரில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

இவருடன் தண்டபாணி என்ற மாஜி எம். எல். ஏ. ஒருவரும் மற்றும் எண்பது பேரும் கைதாகினர்.

கடைசெய்யப்பட்ட நிலம் ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதாகினர்.

இந்நிலம் தொடர்பான வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது என்று பொலிசார் தெரிவித்தனர். (உ)

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. ச.

கிளைக்குழுவினரின் மனு ஏற்கப்பட்டது!

யாழ்ப்பாணம், திங்கள்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின முதலாம் கிளைக் குழுவினர் 9 பேர் சாவகச்சேரி நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. அ. பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

பொதுச்சபையின் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதற்கு தங்களுக்கு உரிமை உண்டென்றும், அவர்களுக்குப் பொதுச்சபையின் சகல கூட்ட அறிவித்தல்களும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் தீர்ப்பளிக்குமாறு மனுவில் கோரப்பட்டிருந்தது.

மனுவில், சங்கத் தலைவி திருமதி ம. சிவஞானம், செயலாளர் க. கணேசலிங்கம் ஆகியோர் எதிர்மனுதாரர்களாக காட்டப்பட்டிருந்தனர்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி சி. நாகராசா, சட்டத்தரணி செ. அம்பிகைபாலனின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் சமுகமளிக்கவில்லை.

மனுகாரில் ஒருவரான பொ. சிவராமலிங்கம் சாட்சியமளித்தபின் மனுதாரர்கள் கோரிக்கை ஏற்று தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

'ஈழநாடு' தேர்தல் பரிசுப்போட்டி

வெற்றி பெற்றவர்களுக்கு பிரமுகர்கள் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

"இலங்கை மக்களில், நேடியம் கதிர் வீச்சு முறையில் குணப்படுத்தப்படக் கூடிய புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்கள் யாழ்ப்பாணத்திலே அதிகமுள்ளனர். இவர்களுக்கு மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிப்பது கஷ்டமாயுள்ளது. எனவேதான் யாழ்ப்பாணத்தில், லயன்ஸ், ரோட்டரி, வைமன் புற்றுநோய்ச்சங்கம் ஆகியவை இணைந்து ஒரு புற்றுநோய் சிகிச்சைநிலையத்தை அமைக்க முயன்றுவருகின்றோம்"

இவ்வாறு ஈழநாடு பத்திரிகை நடாத்திய ("தேர்தல் 77 போட்டி") பரிசளிப்பு விழாவில் லயன்ஸ்கழக தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்திற்கு ஈழநாடு லிமிட்டெட் நிறுவன இயக்குநர் திரு. ஆர். இராஜலிங்கம் தலைமைதாங்கினார். இவ்விழா ஈழநாடு காரியாலயத்தில் நடைபெற்றது.

டாக்டர் சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில், "இம் முயற்சி வெற்றியளிக்க, தற்போது கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் புனர்வாழ்வுக்காக நிதிதிரட்டி முடிந்ததும் நிதி திரட்டப்படுமென்றார். இதற்கான கட்டிடம் மட்டும் கட்டுவதற்கு 5—8 லட்ச ரூபா வரை செலவாகும், இயந்திர சாதனங்களை கனடிய அரசாங்கம் வழங்க இருப்பதாகவும் அவர்கூறினார்.

எஸ். ரி. ஆர். பிலிப்ஸ் அதிபர், திரு. எஸ். தியாகராசா உரையாற்றுகையில், 'ஈழநாடு' பத்திரிகை தமிழ்ப் பகுதியிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு தினசரிப் பத்திரிகையாகும். எமது அபிலாஷைகளை எவ்வளவோ சிரமங்களின் மத்தியில் வெளியிடுவதமட்டுமல்லாது தேர்தல் போட்டிகளையும் நடாத்துவது பாராட்டுக்குரியது என்றார்.

புற்றுநோய்ச் சங்கத்தின் தலைவர் கே. டாக்டர்சனகரத்தினம் பேசுகையில், எம்மவர்களுக்கு மொழிப் பிரச்னை இருப்பதால் அவர்கள் மகாரகம புற்று நோயாளர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்கு கஷ்டமுறுகின்றனர். நாம் நமக்கென ஒரு புற்றுநோய்சிகிச்சை நிலையத்தை நிறுவவேண்டுமென்றார்.

இப்போட்டியில் முதற் பரிசாகிய ஆயிரம் ரூபாவை உதவிய சின்னத்துரை பிரதர்ஸ் அதிபர் திரு. எஸ். சின்னத்துரை, மன்னார் செயலகத்தைச் சேர்ந்த திரு. பி. யேசுதாசனுக்கு வழங்கினார்.

2-வது பரிசுத்தொகையான ஐந்நூறு ரூபாவை மில்க்வைற் நிறுவன அதிபர் திரு. கே. கனகராசா, ரோறு நிறுவனம், எஸ். ரி. ஆர். பிலிப்ஸ் அதிபர் எஸ். தியாகராசா, யாழ். கூட்டுறவு லிமிட்டெட், யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் திரு. நேசைய ஆகியோர் கூட்டாக உதவினர். இவர்கள் சார்பில் இப்பரிசை திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. வி. சிவானந்தனுக்கு எஸ். ரி. ஆர். பிலிப்ஸ் அதிபர் தியாகராஜா வழங்கினார். மூன்றாவது பரிசுத் தொகையான ரூபா 250ஐ உதவிய அரஸ்கோ லிமிட்டெட் நிறுவன அதிபர் திரு. ஆரசரத்தினம், திருவாளர்கள் கே. ரகுநாதனுக்கும், வி. ராஜசூரியருக்கும் சமமாக வழங்கினார்.

பரிசு பெற்றவர்களை பிரமுகர்கள் பாராட்டினர். 'ஈழநாடு' நிறுவன பொதுமுகாமையாளர் திரு. எஸ். சினிவாசகம் பரிசுத்தொகையை வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவித்தார். (கெ)

6 பிரம்படியும் 2 வாரச் சிறையும்

மட்டுவில், ஞாயிறு

பிரயாணச் சீட்டின்றி புகைவண்டியில் பிரயாணம் செய்த வாலிபருக்கு ஆறு பிரம்படிகளும் இரண்டு வாரச்சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லையா நடராஜா என்ற 16 வயது வாலிபர் யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழிக்கு எடுத்த பிரயாணச் சீட்டுடன் வவுனியாவுக்குச் செல்ல முயன்றதால் புகையிரத அதிகாரிகள் அவரை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் ஆஜர் செய்தனர். வாலிபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதிபதி தீர்ப்பளித்தார். (அ)

பாட்டா மோஸ்தர்களை தெரிவு செய்து
ரூ. 16,000/=க்கும் அதிகமான பரிசுகளை
வெல்லுங்கள்

சண்றே 70
சன்டி 74
மெனிக் 45
பாலிகா 48
சித்தாரு 92
ஸ்பிட் 34
சண்டி 83
மிலானோ 37

1ம் பரிசு. சிசில் குளிர்சாதனப்பெட்டி
2ம் பரிசு. றெக்னிஸ் தையல் மெஷின்
3ம் பரிசு. ஒவ்வொரு 'ஈஸ்ரேண்' சைக்கிளாக மூன்று பரிசுகள்
4ம் பரிசு. ஒவ்வொரு ஜோடி தங்கத் தோடாக ஆறு பரிசுகள்

மற்றும் 'யூனிக்' ட்ரான்சிஸ்ரர் சுவர்க் கடிகாரங்கள், 'எலெற்' ட்ரான்சிஸ்ரர் றேடியோக்கள், 100 ஜோடி பாட்டா சப்பாத்துக்கள் ஆகியனவற்றை வென்றுக வேண்டும்.

விதிகள்:

பெயர் ....

விலாசம் ....

வியாபாரியின் பெயரும் விலாசமும்

....

பாட்டா

RIO (Jaffna)
Daily 4 Shows
GOD FORGIVES
I DON'T

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 2 30 7-00
ஜெய்சங்கர் - சாவித்திரி
தாய்க்கு ஒரு பிள்ளை

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
SECRET FOREST OF AFRICA
(Scope Color)

மனோஹரா எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ காலை 7-00 மணிக்கு காட்சி ஆரம்பமாகும்
காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
(யாழ். நகர்) போன்: 7693
எம். ஜி. ஆர். - லதா நடித்த
நீதிக்கு தலைவணங்கு

வின்ஸர் தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

A Grand Release!
சாந்தி தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 9-30
யாழ். நகர் 'FIVE CRAZY BOYS'
போன்: 7642 (Color)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 4-30, 7-00
DARING DOZEN

மூன்றாவது வெற்றி வாரம்!
ராஜா- தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
யாழ்நகர்
கே எஸ். கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)

அகதிப்பிள்ளைகளை அநாதை இல்லம் பொறுப்பேற்றது

அகதிகள் முகாமில்

ஒரு சந்திப்பு:

கா. யோகநாதன்

பண்ணை அகதிகள் எவரும் கட்டாயத்தின்பேரில் முகாமிலிருந்து செல்லவில்லை. தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில்தான் சென்றுள்ளார்கள். ஆரம்பத்தில் 139 பேர் இருந்தார்கள். தற்போது 75 பேர்தான் இருக்கின்றார்கள்.

எல்லோரும் ஏழைகளே

கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களில், அகதிகளாக இருப்பவர்கள் பெரும்பாலானோர் ஏழைகளே. அதனால்தான் அவர்கள் சுயமாக அந்தப் பாதிப்பை நிவர்த்தி செய்ய முடியாத நிலையிலிருக்கின்றனர்.

கிடைத்த வேலையை மறுத்த அகதி

நெடுங்கேணியிலிருந்து ஒரு குடும்பத்தினர் பொதுசன நூலகத்திலுள்ள புனர்வாழ்வுச்சபைக்கு வந்திருந்தனர். இக்குடும்பத்திற்கு ஒரு வேலை பெற்றுக் கொடுக்க முயற்சி செய்யப்பட்டது. வைத்திலிங்கம் கம்பெனி உரிமையாளர் 200 ரூபா சம்பளத்தில் வேலை வழங்க முன்வந்தார். ஆனால் அவர் அந்த வேலையை ஏற்க மறுத்துவிட்டார். சொந்தக் காணி வேண்டும் என்று கூறினார். இதேபோன்றுதான் அகதிகள் எல்லாரும் காணியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

பண்ணை முகாம் அகதிகளைப் பார்க்க வந்திருந்த திருமதி சோமா சண்முகலிங்கம், இந்தக் கதையை என்னிடம் கூறினார். வேலையைச் செய்துகொண்டே காணியைப் பெற முயற்சிக்கலாம். ஆனால் வேலை செய்தால் காணி கிடைக்காமல்போய்விடும் என்ற பயம் எல்லா அகதிகளிடமும் குடிகொண்டிருக்கிறது.

திருமதி சோமா சண்முகலிங்கம் தினமும் இம்முகாமுக்கும் மற்றும் முகாம்களுக்கும் சென்று அகதிகளுக்குத்தேவையான உதவிகளைச் செய்கின்றார். இந்த முகாமிற்கு மட்டுமல்ல மற்றும் முகாம்களுக்கும் செல்கின்றார்.

உதவிகள் துஷ்பிரயோகம்

அகதிகளில் சிலர் தமக்கு வழங்கப்படும் உதவிகளைத் தவருகப் பயன்படுத்தி வருவதால் உதவிசெய்வோர்கூடத் தயங்குகின்றார்கள். சில அகதிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட புதிய துணிகளைக் கைச்செலவிற்காக குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள் என்று சில தொண்டர்கள் கவலைப்பட்டனர். இதனால் மற்றும் அகதிகளும் பாதிக்கப்படவேண்டியேற்படுகிறது. ஜப்பானிலிருந்து அன்பளிப்பாக லயன்ஸ் கழகத்தினரால் பெறப்பட்ட சேட்டுகள் அகதிகளுக்கு வழங்கப்பட்டபோது அவற்றைச் சிலர் முகாமிலேயே விற்றுவிட்டதாக மற்றும் அகதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல வர்த்தக நிலையங்கள் இந்த முகாமிற்குப் பல உணவு வகைகளை வழங்கியுள்ளன.

5 பிள்ளைகளை அநாதை இல்லம் பொறுப்பேற்றது

அகதிகளாகப் பண்ணை முகாமுக்கு வந்துள்ள 5 சிறுவர்களை அநாதை இல்லம் பொறுப்பேற்றுள்ளதாக சகோதரர் பாலகிருஷ்ணர் கூறினார். இச்சிறு இயம் ர்களுக்குத் தமிழ் அதிகம் தெரியாது இவர்களுக்குக் கல்வி அளிப்பதற்கான ஏற்பாட்டை அவர் செய்துவருகின்றார்.

ராமு என்ற ஒரு சிறுவனைச் சந்தித்தேன். இச்சிறுவனும் ஒரு அகதி குடும்பத்தைச் சேர்ந்தவன். இச்சிறுவனுக்கு தமிழ் பேசத் தெரியாது. படிப்பு எல்லாம் தனிச்சிங்களம்தான். 'தமிழ்ப்பாடசாலை இல்லையா?' என்று அருகில் நின்ற மாடசாமி என்பவரைக் கேட்டேன்.

இருக்கிறது, ஆனால் அவங்க எல்லாரும் சிங்களம்தான் படித்தாங்க என்றார்.

பண்ணை முகாமுக்கு வந்த சில பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலுள்ள சிலர் பொறுப்பேற்றுப் பராமரித்துவருகின்றனர், பெற்றோர் விருப்பத்தின்படி இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு தற்காலிக ஏற்பாடுதானும். பின்னர் இப்பிள்ளைகளுக்கு ஒரு தொழிற்பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

இந்த நிலைமையைப் பார்த்திருக்கலாமா?

வெளியுலகின் பலநாடுகளிலும் தமிழ் மக்கள் தமிழ் மொழியை மறந்துவிட்டார்கள் என்று இங்குள்ள தமிழ் அன்பர்கள் தமிழ்நூல்கள் அனுப்பிவருகிறார்கள். இது வரவேற்கவேண்டியதுதான். ஆனால் முதலில் நம் சொந்த நாட்டிலேயே தமிழராக இருந்தும் தமிழ் தெரியாமல் வாழ்ந்துகொண்டிருக்கும மக்களுக்குத் தமிழறிவு ஊட்டவேண்டாமா? அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் இந்த முயற்சியில் முதலில் இறங்கியபின்தான் உலகத்தைக் கவனிக்கவேண்டும். நம் கண்முன்னாலேயே நம் தமிழ்ச்சகோதரர்கள் தமிழ்மொழியை மறந்துகொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கலாமா?

அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு உடனடியாகக் கல்வி வசதியளிக்கவேண்டும். இவர்கள் குடியேற்றப்பட்டதுடன் தொண்டு முடிந்துவிட்டதென்று இருந்துவிடமுடியாது, அவர்களுக்கு நல்ல கல்வி அறிவூட்டி, சமூகத்தில் அவர்களும் பங்குபெறக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டியது அவ

(அ)

இன்று...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாமல் வீட்டோ கத்திக்குத்துக்கு ஆவாக்கி தமது ஆதிக்கப்போட்டிகளுக்கு ஆயுதமுனையில் துடிக்கும் அப்பாவி உயிர்களைப் பலியாக்கிக்கொண்டிருக்கின்றன. இந்தக் கையாலாகாத நிலையும் ஐக்கிய நாடுகளின் மற்றொரு சாபக்கேடு எனலாம்.

ரஷ்யாவின் பிரேரணை

இந்நிலையில் இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கையில் ரஷ்யா ஐ. நாவின் அரசியல் பந்தோபஸ்து பொதுச்சபைக் கமிட்டியில் சமர்ப்பித்துள்ள இரு பிரேரணைகள் உலக முக்கியத்துவம் பெறுகின்றன.

அணு ஆயுதத்தடை

சர்வதேச பதற்றத் தணிவை ஆழப்படுத்தவும் வலுப்படுத்தவுமான பிரகடனம் ஒன்றும் அணு ஆயுத தடைபற்றிய தீர்மானமும் பொதுச்சபையில் 20-ம் திகதி முதல் விவாதிக்கப்படுகின்றது. ஹெல்சிங்கியில் கூடிய மகாநாட்டில் உலகசமாதானத்திற்கு நேரம் - விவாத பட்டியல் தயாரிப்பில் ஏற்பட்ட இணக்கம்மூலம் காட்டப்பட்ட பச்சைக்கொடியை அடுத்து இம்மசோதாக்கள் உலக அமைதிக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

'இந்த அரசாயினும் அமுல் செய்ய வேண்டும்'

யாழ்ப்பாணம், திங்கள்

5-ம் தர அதிபர் பதவிகளை நீக்கிவிட்டு அவர்கட்கு 4 ம் தர அதிபர் பதவி வழங்குவதுடன் பட்டதாரிச் சம்பளமும் வழங்குமாறு இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கம் கடந்த அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தது. சம சம்பளத்திட்டத்தால் பயனடையாத சேவை மூப்பு ஆசிரியர்கள் பற்றி அன்றைய கல்வி அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தோம். சம்பள நிர்ணயக் கமிஷன் முன்னர் இப்பிரச்னை பற்றிச் சாட்சியம் அளித்தோம். இவை பற்றி கடந்த அரசாங்கம் சில சலுகைகளை அளிக்க முன்வந்தது. இன்றைய அரசாங்கமாவது இவற்றை நடைமுறைப்படுத்தவேண்டும்'

இவ்வாறு இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட பொதுச் செயலாளர் திரு. எம். குமாரசாமி தெரிவித்தார். யாழ் பாரதி வித்தியாசாலையில் நடந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்

திரு. குமாரசாமி தொடர்ந்து பேசுகையில், 'ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தி தொழிலாள வர்க்கத்தைப் பினவுபடுத்த முனைகிறது இவ்வரசாங்கம். முதலாளித்துவ வர்க்கத்தை ஐக்கியப்படுத்த ஆரம்பித்துவிட்டது. முன்னர் ஆட்சிக்கு வந்தபோது ஆசிரியர்கள் பாடசாலைகளில் கூட்டம் கூடுவதைத் தடைசெய்ததையும், போதிய ஆசிரிய நியமனங்கள் பதவி உயர்வுகள் போன்றவற்றை வழங்காது ஆசிரியர்களின் உரிமைகளை மூழ்கடித்தமையும் நாம மறந்துவிடமுடியாது.

'அரசாங்கத் தலைவர்களின் பேச்சுக்கள் இனிப்பாகவுள்ளன. ஆனால் முடிவுகள் என்ன வருமோ என ஐயம் கொள்ளவேண்டியுள்ளது. இன்று நாட்டிலுள்ள அரச ஊழியர்களுக்கும், கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் தேவைப்படுவது அவர்களது வேதன முறை முழுவதும் திருத்தி அமைக்கப்படவேண்டுமென்பதே ஒழிய சம்பள உயர்வுகளல்ல' என்றார். [கா]

மணிவாக்கு

ஆசையைப் பூர்த்தி செய்யாமல்விடுதல் நன்று. ஒரு முறை பூர்த்தியாக்கினூல், பின் ஆசையைத் தடுப்பது கடினமாகும்; அல்லது முடியாததாகும்.
—காந்திமகான்.

ஈழநாடு
The Eelanaadu

கூப்பன்!

மாதாந்தம் நானூறு ரூபாய்க்குமேல் வருமானம் பெறுவோரதும் அவர்களது குடும்பத்தினரதும் கூப்பன்கள் ரத்துச் செய்யப்படவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

கூப்பனுக்கு உணவுப் பொருள் வழங்குவதையும் மற்றும் சலுகைகளையும் ரத்துச் செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாம்.

இதனூல் பாதிக்கப்படுவோர் நிலைமையைச் சமாளிப்பதற்கு சம்பள உயர்வு வழங்கப்படவிருக்கிறதாம்.

குறைந்த சம்பளம் பெறுவோருக்கு இருபத்தைந்து சதவீதமான சம்பள உயர்வும் கூடிய சம்பளம் பெறுவோருக்கு இருபது சத வீதமான சம்பள உயர்வும் கிடைக்குமாம்.

நானூற்றிப் பத்து ரூபாய் சம்பளம் பெறுபவரின் நிலையுடன் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் பெறுபவரின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

அரசாங்க சேவையிலோ தனியார்துறையிலேயோ பணியாற்றுபவர்களைப் பொறுத்தமட்டில்தான் சம்பளத்தைக் கணித்துக் கூப்பனை ரத்துச் செய்ய முடியும்.

அன்றுடம் தொழில் செய்து ஊதியம் பெறுபவர்களினதும் தனிப்பட்ட முறையில் தொழில் செய்பவர்களினதும் நிலை என்ன?

தனிப்பட்ட தொழில் செய்பவர்களில் பலரும் அன்றுடம் வேலை செய்து பிழைப்பவர்களில் பலரும் மாதம் நானூறு ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் பெறுவதும் உண்மை.

நானூறு ரூபாய் வருமானம் பெறும் குடும்பத்திலுள்ளவர்களின் தொகையையும் கணித்துப் பார்க்க வேண்டும்.

கல்விச்சீர்கேட்டினூல் ஒவ்வொரு குடும்பமும் பிள்ளைகளின் கல்விக்கெனச் செலவிடும் தொகையையும் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

கூப்பனை ரத்துச் செய்வதால் பாதிக்கப்படுபவர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள சம்பளஉயர்வு அரசாங்க சேவையிலுள்ளவர்களைப் பொறுத்த அளவில் உடனடியாகக் கிடைக்கலாம்.

எத்தனை தனியார்துறையினர் இவ்விதம் சம்பள உயர்வு வழங்கக்கூடிய நிலையிலுள்ளனர்?

இதனூல் சில நிறுவனங்கள் மூடப்படவேண்டிய நிலையும் ஆட்களைக் குறைக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

சம்பளத்தைக் கொண்டு கூப்பனை ரத்துச்செய்யும் திட்டம் 'தலைவலிபோய் திருகுவலி' வந்த கதையாக் முடிந்துவிடக்கூடாது என்பதே நமது கவலை.

இதைவிட கூப்பன்முறையையே நாட்டிலிருந்து ஒழித்துவிடுவது நல்ல பயன் தரலாம்.

"2500 ஆண்டுகளுக்கு முன்

திராவிட மக்கள் ஓவியத்தால் சிறப்புற்று விளங்கினார்கள்"

ஜி.ஜி., செல்வா ஓவியவெளியீட்டுவிழாவில்

கலாநிதி அ. சண்முகதாஸ் உரை

யாழ்ப்பாணம், திங்கள்

திராவிட மக்கள் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்குமுன் ஓவியக்கலையில் சிறப்புற்றுவிளங்கியுள்ளனர். சிந்துவெளி நாகரிகத்தில்கூட, திராவிட மக்கள் ஓவியங்களினூல் தமது அறிவை வளர்த்திருக்கிறார்கள் என்பதை அங்கு கண்டெடுக்கப்பட்ட ஓவிய சுவடுகள் நிரூபித்துள்ளன.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கலை கலாச்சார கல்வி காப்பு கழகத்தின் அமரர்கள் செல்வா, ஜி. ஜி. ஆகியோரின் ஓவியவெளியீட்டு விழாவில். இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக தமிழ்துறை பொறுப்பு விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கழக தலைவர் சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் நடந்த இவ்விழாவில், கலாநிதி அ. சண்முகதாஸ் மேலும் கூறியதாவது:

ஈழத்தமிழரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கென்று ஓவியக்கலைபற்றிய வரலாறுகள் இல்லையெனலாம்.

"16ம் நூற்றுண்டளவில் ஆங்கிலேய படையெடுப்புக்கள், இந்துநாகரீகத்துடன் பின்னிப்பிணைக்கப்பட்ட ஓவியக்கலைசிரழிக்கப்பட்டதற்கும், வரலாறுகள் இல்லாமல் போனதற்கும் அடிப்படைக்காரணமாகும். ஆங்கிலேயரின் மத பிரசாரங்களை தீவிரப்படுத்தலினூல் நல்லூர் ஆலயம் சிதைக்கப்பட்டது; திருகோணமலை ஆலயம் சிதைக்கப்பட்டது. இன்னும் பல ஆலயங்கள் சிதைந்து இவ்வாலயங்களின் கற்கள் கோட்டைகள் கட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அமரர் கல்கியும், ஓவியர் மாலியும் இலங்கை விஜயத்தை மேற்கொண்டபோது இலங்கையில் ஒரு ஓவியரைக்கூட அவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கமுடியவில்லை. ஓவியர் பெனடிக்ற் இன்று நேற்று ஓவியக்கலையில் பிரபல்யமானவரல்ல' அவர் ஓர் உலகப் புகழ் பெற்ற ஓவியர்

'இவர் இலங்கையில் மட்டும யதார்த்த பண்புகள் நிறைந்த ஓவியங்களை வரையவில்லை. ஓவியர் பெனடிக்ற் இந்தியா சென்றசமயம், திரு. முத்தையா செட்டியாரின் பாரியாரது முழுஅளவிலான ஓவியத்தை வரைந்துதரும்படி பணித்திருந்தனர் அவர்கள் விரும்பியஅமைப்பில்யதார்த்தமாக அந்த ஓவியத்தை வரைந்துகொடுத்தற்கமைய அண்ணமலைப்பல்கலைக் கழகத்தில் அன்னருக்கு பெருவிழா எடுத்துக் கௌரவித்தனர். இப்பேர்பட்டஓவியரை நான்பாராட்டி பேசவேண்டியதில்லை.

இந்திய பல்கலைக் கழகங்களில் ஓவியர்களுக்கு தனியறையுண்டு மாணவர்கள் இவர்களைக்கண்டு தங்கள் ஐயங்களை திரிபுற கேட்டு அறிந்து ஓவியக் கலைக்கு புத்துயிர் கொடுத்து வருகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாண வளாகத்தில் தமிழ் மகன் ஒருவர் தலைவராக இருப்பதால் இந்திய பல்கலைக் கழகங்களிலுள்ள முறையைப் போல விரைவில் ஓவியக் கலையைவளர்க்கப்பிரிவொன்றை அமைக்க முயல்வோம்.

ஒரு புகைப்படக்கலைஞர் ஒரு புகைப்படத்தை எடுப்பதற்கும் ஓவியரொருவர் ஒருஓவியத்தை வடிப்பதற்கும் வேறுபாடுண்டு. முன்னவருக்கு பொருட் செலவு அதிகம், சக்திவிரயம் குறைவு பின்னவருக்கு பொருட்செலவு குறைவு, மூளைபலவிரயம் அதிகம், இதனூல்தான் ஓவியன் வரையும் ஓவியங்கள் யதார்த்த பண்புகள் நிறைந்ததாக மிளிர்கின்றன. ஓவியர் பெனடிக்ற் ஓவியங்களும் யதார்த்த பண்புகள் நிரம்பியுள்ளதால் 'இறப்பரில்லாத ஓவியர்' என தலைவர் கூறிய கூற்று முற்றிலும் பொருத்தமானதாக இருக்குமென நம்புகிறேன்

விழாவிற்கு தலைமைவகித்த திரு. சோமசுந்தரம் பேசுகையில் எமது கழகம் தலைமைப் பணியகமொன்றைநிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்கான காணியை பலர் அன்பளிப்பாக வழங்குவதற்கு முன்வந்தபோதிலும் நிதியுதவி பெருமளவில் தேவைப்படுகின்றது. இதற்காக இன்றைய உலகில், எதற்கும் அரசியல் என்ற நிலைஉருவாகியுள்ளதால் ஓவியர் பெனடிக்ற் வரைந்த தேசியத் தலைவர்களின் ஓவியங்களை விற்பனை செய்வதன் மூலம் ஈடேற்றலாமென நம்புகிறேன் என்றார்.

முதல் ஓவியத்தை சின்னத்துரை சகோதரர்கள் நிறுவன முதல்வர்பெற்றுக்கொண்டார் விழாவில் செல்வி புஷ்பா செல்வநாயகம் உட்பட பலர் உரையாற்றினர். (கெ)

குண்டசாலை தமிழ் மாணவருக்கு கரடியன் ஆற்றில் போதனை!

கல்வி அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்.

பாதிக்கப்பட்ட குண்டசாலை தமிழ் மாணவத் தலைவர்கள் முல்லைத்தீவு தேசியப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். செல்லத்தம்பு தலைமையில் கல்வியமைச்சரைச் சந்தித்து; பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு அளித்தவாக்குறுதியின்படி, தமக்கு போதனையை கரடியன் ஆறு விவசாயக் கல்லூரிக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்தனர்.

கல்வியமைச்சர், இவர்களது கோரிக்கைகளை தாம் செயல்படுத்துவதாகவும் இவர்களுக்கான தமிழ்ப்பிரிவு அடுத்த ஆண்டு முதலாம் திகதி ஆரம்பமாகுமெனவும் கட்டளைபிறப்பித்துள்ளதாக இவர்களிடம் தெரிவித்தார். (கெ)

பிரதி அமைச்சர் இம்புலான இன்று வவனியா விஜயம்

வவனியா, திங்கள்

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை பிரதிஅமைச்சர் திரு. பி. சி. இம்புலான இன்று வவனியாவுக்கு விஜயம் செய்கின்றார்.

பிரதி அமைச்சரை வரவேற்பதற்கான சகல ஒழுங்குகளையும், அரசாங்கஅதிபரும் பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. ஆர். தியாகலிங்கமும், பிராந்திய உள்ளூராட்சி சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் திரு. ப. பரஞ்சோதியும் மேற்கொண்டுள்ளனர்.

வவனியா கச்சேரி மண்டபத்தில் இன்று காலை நடைபெறும் மாநாட்டில் பிரதி அமைச்சர் திரு. இம்புலான கலந்துகொள்வார்.

மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களினதும், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினதும், செயல் திட்டங்களும் அவை எதிர்நோக்கும் பிரச்னைகள் பற்றியும் இம்மாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது;

வவனியாபட்டினத்திற்கு நீர் வழங்கல்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதுபற்றியும், வவனியாவில் இரு வீடமைப்பு திட்டங்கள் ஆரம்பிப்பது பற்றியும், முல்லைத்தீவிலும், நாயாற்றிலும், மீனவர்களுக்கு வீடமைப்பு திட்டம் ஆரம்பிப்பதுபற்றியும் கரப்பன்காடு வீடமைப்புத்திட்டம் பற்றியும், இம்மாநாட்டில் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

கட்டிடப்பொருட்கள் பெற்றுக்கொள்வதில் உள்ளகஷ்டங்கள் பற்றியும் வெடிமருந்துகள் பெற்றுக்கொள்வதில் உள்ளசிரமங்கள்பற்றியும் இம்மகாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது. (க)

பயங்கர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாலும் மழை தொடர்ந்து பெய்வதாலும் வெள்ளம் வருமோவென்று இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். கடுகண்ணாவையிலும் ஒரு மண் சரிவு நிகழ்ந்துள்ளது. ஆனல் எவரும் பாதிக்கப்படவில்லை' கொழும்பு-நானுஓயா' கடுகதி ரயில் 'பொடி மெனிக்கே' நேற்று தாமதித்தே சென்றது.

குருநாகலை-கண்டி வீதியில் கலகெதர எனுமிடத்தில் பெரியதொரு மரம் விழுந்துள்ளதால் இப்பாதையில் போக்குவரத்துக்கள் நேற்று மாலை வரை நடைபெறவில்லை.

இது இவ்வாறிருக்க நாட்டின் பலபாகங்களிலும் பரவலான மழை பெய்துவருவதாக வளிமண்டல அவதான நிலையம் அறிவித்துள்ளது. கண்டியில் 105 மில்லிமீட்டர் மழையும், கொழும்பிலும் காங்கேசன்துறையிலும் முறையே 81, 90 மில்லிமீட்டர் மழையும் பெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, அளிசாவளை வீதியில் 2 அடி உயரத்துக்கு வெள்ளம் நிற்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (உ-அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்ஹோவில் மேலை வீதி '58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.

நாடும் நடப்பும்

கடந்த ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது 'பொத்துஹெர' என்னுமிடத்தில் யாழ்தேவி ரயிலை மறித்துக் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் பின்னர் தங்கப்பாளங்களாக உருமாறிவிட்டனவா?

கொழும்பிலுள்ள நகைக் கடையொன்றில் பொலிசாரால் கைப்பற்றப்பட்ட தங்கப்பாளங்கள் இச்சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

இப்படியான நகைகள் உருமாறிப்போவதில் ஆச்சரியமில்லை.

இதைவிட, ஆச்சரியமான விஷயமொன்றுண்டு.

இதே ரயிலில் சென்ற சிலர் அன்றிரவு பீதி கொண்டு உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஓடிச்சென்றபோது ஒரு சிங்களக் குடும்பம் அவர்களுக்குப் புகலிடமளித்து உணவும் கொடுத்து இரண்டு தினங்கள் பாதுகாத்து பின்னர் தகுந்த பாதுகாப்புடன் அனுப்பி வைத்தார்கள்.

அவர்கள் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்த பின்னர்தான் ஒரு சோடி தோடு அந்த வீட்டில் கிடக்கக் காணப்பட்டதாம்.

அந்த தோட்டுக்குரியவர் பற்றி அவர்கள் இப்பேது தகவல் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலயத்தில் இப்போது பணி புரிகிறார்.

0 0 0

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை இரண்டில் இப்போது மீண்டும் எஸ். பீ மயில்வாகனனின் சிம்மக்குரல் இடையிடையே ஒலிக்கின்றது.

வானொலி ரசிகர்கள் அந்தக் குரலைக் கேட்டுப் பெருமகிழ்வு கொள்கின்றனர்.

0 0 0

யாழ்ப்பாணத்தில் அரிசி விலை அதிகரித்துக்கொண்டு போகிறது.

நேற்றுத் திருநெல்வேலிச் சந்தியில் மூன்று ரூபாய் அறுபத்தைந்து சத வீதம் அரிசி வாங்கினேன்.

நல்ல திறமான அரிசி என்று வியாபாரி சொன்னதை நம்பி வீட்டிலும் "பார்த்தியா சோக்கான அரிசி மலிவாக வாங்கியிருக்கிறேன்" என்று பெருமையடித்தேன்.

நண்பகலில் வீட்டில் சொன்ன பதில் "நல்ல அரிசிதான் ஒரு கொத்து அரிசியில் அரைச்சுண்டு கல்லு. இதைவிடப் பக்கத்துக் கடையில் நாலு ரூபாய்க்கு நல்ல அரிசி வாங்கியிருக்கலாம்."

நான் என்ன சொல்ல முடியும்.

- ஊர்சுற்றி

---

2 கார்கள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுதரவாகக் கண்டுபிடிக்கப்பட்டன. பொலிசார் இக்கார் கடத்தல் பற்றி விசாரணை செய்துவருகின்றனர்.

யாழ். நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்வார்கள். கனகரத்தினம் மகாவித்தியாலயம் (இங்கிலாந்து). யாழ்ப்பாணக்கல்லூரி (அமெரிக்கா), உடுவில் மகளிர் கல்லூரி (பிரான்ஸ்), யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி (சோவியத் ரஷ்யா) சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,(சீனு) யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் (இஸ்ரேல்) சென்பற்றிக்ஸ் கல்லூரி(பாகிஸ்தான்)வேம்படி மகளிர் கல்லூரி (எகிப்து) சென்ஜோன்ஸ் கல்லூரி (இலங்கை) வியோகிளப் (இந்தியா).